**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.355/2024 நாள்- 10.10.2025

**வா.சா.1-ஆதவன்**

**<u>வா.சா.1-ன் குறுக்குவிசாரணை தொடர்ச்சி பிரதிவாதி தரப்பில்</u>**

என்னிடம் காட்டப்படும் வாசாஆ.1 தான் தாவா சொத்தின் மாதிரி வரைபடம் என்றால் சரிதான். வாசாஆ.1ல் HVPO மேற்கே தென்வடல் தெரு உள்ளது எ ன்றால் சரிதான். வாசாஆ.1ல் NOVI என்ற இடம் இருக்கிறது என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லைஎன்றால் தாக்கல் செய்துள்ளேன். தென்வடல் தெரு வாசாஆ.2 ல் காலத்தில் தெருவாக இருந்ததா என்றால் இருந்தது. வா.சா.ஆ 5 என் அப்பாவிற்கும் , என் சித்தப்பாவிற்கு;ம் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் ஆகும். வா.சா.ஆ 5 1966 ம் ஆண்டு எழுதப்பட்டது வா.சா.ஆ 5 ல் 4, 6 இனச் சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ 5 ல் 4,6 இனச் சொத்துக்களை தவிர்த்து 1ம் இனச் சொத்து காட்டப்பட்டுள்ளது 2,3 ம் இனச் சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளதா என்று எனக்கு ஞாபகம் இல்லை. 2,3 ம் இனச் சொத்துக்கள் பொது நடைபாதை என்றால் சரிதான். நாளது தேதி வரை 2,3 ம் இனச் சொத்துக்கள் பொது நடைபாதையாக தான் அனுபவிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். என் அப்பாவிற்கு வா.சா.ஆ.5 ல் 3 இனச் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் மொத்தமாக 13 அயிட்ட சொத்துக்கள் என் அப்பா பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது தபசில் சொத்துக்கள் எந்த காலத்திலும் நஞ்சையாகவும் , புஞ்சையாகவும் இருந்ததில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் வீட்டு மனை என்றால் சரிதான். 1935 ம் ஆண்டு சுப்பையா நாடாருக்கு சொத்துக்களை கிரையம் கொடுத்த பின்பு வாசாஆ.6 ன் படி சுப்பையா நாடாரின் வாரிசுகள் என் அப்பாவிற்கு பிணாமி கிரைய விடுதலை பத்திரம் எழுதிக்

கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வாசாஆ.2 சுப்பையாநாடாருக்கு பிணாமி எழுதப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. வாசாஆ.6 என் அப்பாவிற்கு சுப்பையாநாடாரின் வாரிசுகள் பிணாமி என்ற நிலையில் தங்களுக்குண்டான உரிமையயை எழுதிக் கொடுத்துள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. வாசாஆ.6 ன் அடிப்படையிலும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிணாமி ஒழிப்பு சட்டடதின் கீழ் வாசாஆ.6 க்கு எந்த விதமான மதிப்பும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ன் அடிப்படையில் நாகரத்தினமும், அவரது வாரிசுகளும் வா.சா.ஆ.6 ல் கண்ட சொத்தி ன் உரிமையை கோர முடியாது என்றால் சரியல்ல. நாகரத்தினம் நாடார் என் அப்பா தான். வா.சா.ஆ.6 ல் தவிர வேறு ஆவணங்கள் அடிப்படையில் தாவா சொத்திற்கு உரிமை கோருகிறேன் என்றால் வா.சா.ஆ.16 ன் படி உரிமை கோருகிறேன். வா.சா.ஆ.16 ல் எனக்கு 3 ம் இனச் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.16 ல் உள்ள 3 இனச் சொத்தில் இந்த வழக்கின் 4,6 ம் இனச் சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளதா என்றால் 3 ம் இனச் சொத்தில் 3 ம் அயிட்ட சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது. 4,6 ம் அயிட்ட சொத்திற்கு மேற்கு பக்கம் தென்வடல் ரோடு என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ல் 3 ம் இனச் சொத்திற்கு மேற்கு பக்கம் 1ம் இனச் சொத்து என்று மால் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ.16 ல் காட்டப்பட்டுள்ள 3 ம் இனச் சொத்து தாவா வழக்கின் 4,6 இனச் சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். எ ன் அப்பாவிற்கு 2 பெண் பிள்ளைகளும் 5 ஆண்மக்களும் வாரிசுகள் ஆவார்கள். அனைவரும் என் அப்பாவிற்கு பாத்திய்ப்பட்ட அனைத்து சொத்துக்களையும் வாசாஆ.16 ன் படி பாகப்பிரித்துக் கொண்டோம் என்றால்சரிதான். என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் என் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் தாவா வழக்கின் 4,6 இனச் சொத்துக்கள் துலங்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் வங்கியில் பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். எனக்கு ஆவணங்கள் பற்றிய

விவரங்கள் அனைத்தும் நன்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு தற்போது நடைமுறையில் இருந்து வரும் சட்ட நடைமுறைகள் பற்றி ஓரளவு தெரியுமா என்றால் இல்லை. எனக்கு பிணாமி ஒழிப்பு சட்டம் பற்றி தெரியாது. வா.சாஆ. 5ன் அடிப்படையில் என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் தாவா 4ம் இனச் சொத்து ஒன்று இ,ல்லைஎன்றால் சரியல்ல. வாசாஆ.5 ற்கு பிறகு தான் வாசாஆ.6 எழுதப்பட்டது என்றால் சரிதான். வாசாஆ.5 விவரம் தெரிந்து தான் வாசாஆ.6 எழுதப்பட்டது என்றால் இல்லை. வாசாஆ.6ல் பக்கம் மூன்றில் வாசாஆ.5 பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ.5 கைவசம் வைத்து தான் வாசாஆ.6 எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா 4ம் இனச் சொத்து என் அப்பாவிற்கோ என் அப்பாவின் மூததையாருக்கோ எந்த காலத்திலும் பாத்தியப்பட்டிருந்தது இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ.2 லும், அதன் தொடடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களிலும் தாவா 4ம் இனச் சொத்தின் சர்வே எண்ணை பொறுத்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா 4ம் இனச் சொத்தை சர்வே எண்ணின் படி மேற்கண்ட ஆவணங்களில் அடையாளம் காண இயலாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் காண்பித்துள்ள 2,3 இனச் சொத்துக்களின் உயரம் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 11 அடி உயரம் இருக்கும் அ தற்கு மேல் நான் கான்கிரிட் போட்டு வீடு கட்டியுள்ளேனா என்றால் அனுமதியுடன் கட்டியுள்ளேன். 2வது இலக்க சொத்திற்கு மேல் நான் வீடு கட்டியுள்ளதால் 10 அடிக்கு மேலாக பொதுவாக அனுபவம் செய்யமுடியாத நிலையில் இருக்கிறது என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்தின் மீது நான் கட்டியுள்ள வீட்டின் கிழமேல் சுமார் 6 அடியும், தென்வடல் சுமார் 22 அடியும் இருக்கும். நான் மேற்படி வீடு கட்டுவதற்கு 2011ம் ஆண்டு பிரதிவாதியிடம் அனுமதி பெற்றுதான் வீடு கட்டினேன். அனுமதி வாங்கியதற்கு எழுத்தின் மூலமான ஆதரவுகள் என் கைவசம் இல்லை என்றால் சரிதான். எந்த தேதியில் எனக்கு அனுமதி

கொடுக்கப்பட்டது என்று தேதி பற்றி தெரியாது. 2011ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அனுமதி கேட்டேன். அனுமதி கேட்ட நேரத்தில் நான் வங்கியில் பணிபுரிந்தேனா என்றால்இல்லை. ஒரு சொத்தின் உரிமை பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின் அடிப்படையில் தான் மாற்றம் செய்ய வேண்டும் என்றால் சரிதான். 2 ம் தபசில் சொத்தின் மதிப்பு 2011 ம் ஆண்டு எவ்வளவு இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எந்தவிதமான அனுமதியும் பிரதிவாதியால் எந்த காலத்திலும் கொடுக்கப்பட்டதில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் ஆட்சேபணையை மீறி பிரதிவாதியின் எதிர்கோரிக்கையில் கூறியது போன்று நான் கட்டிடம் கட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. அதனால் அந்த கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 2 ம் தபசில் சொத்தின் கிழமேல் சுமார் 6 அடியும், தென்வடல் சுமார் 22 அடியும் இருக்கும் . 3 ம் தபசில் சொத்தின் கிழமேல் சுமார் 28 அடியும், தென்வடல் சுமார் 6 அடியும் இருக்கும் . 2 ம் இனச் சொத்தின் நடைபாதையில் தான் 2 ம் இனச் சொத்தை ஒட்டியுள்ள வீடுகளுக்கான மின் இணைப்பு பெட்டி அமைக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. பிரதிவாதிகளின் வீடு எத்தனை வருடங்களாக உள்ளது என்றால் நான் பிறப்பதற்கு முன்பாகவே இருக்கிறது. 5 ம் இனச சொத்து தண்ணீர் தொட்டி பிரதிவாதியின் வீடு இருக்கும் காலத்திலேயே இருக்கிறது என்றால் சரியல்ல.

(நேரமின்மை காரணமாக குறுக்குவிசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,

இராஜபாளையம்.